செய்தி வெளியீடு எண். 179 நாள்: 05.04.2018

# கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.04.2018) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வெண்மணம்புதூர் ஊராட்சியில் கட்டப்பட்டு வரும் அம்மா பூங்கா மற்றும் அம்மா உடற் பயிற்சி கூடத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்க ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்களை அறிவுறுத்தினார். ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் திடீர் ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்கு படிக்கும் மாணவர்களிடம் தங்களின் வீடுகளில் கழிவறை வசதி உள்ளதா என்பதை குறித்து கேட்டறிந்தார்.

காவாங்கொளத்தூர் மகளிர் சுய உதவி குழுக்களுடன் கழிவறைகளை கட்டி பயன்படுத்துவதின் அவசியத்தை வலியுறுத்தும் கலந்தாய்வில் கலந்துகொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கலந்துரையாடினார். பின்னர், காவாங்கொளத்தூர் ஊராட்சியில் வீடு, வீடாகச் சென்று கட்டப்பட்டுள்ள தனிநபர் இல்லக் கழிவறைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

சத்தரை ஊராட்சியில் கூவம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுவரும் மேம்பாலப் பணிகளை பார்வையிட்டார்.

கூவம் புதுச்சேரி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் செங்கற்சூளைகளில் பணிபுரிபவர்களின் குழந்தைகளை நேரில் சந்தித்து குழந்தைகளின் கல்வித்திறனை கேள்விகளின் மூலம் தெரிந்துக்கொண்டார்.

இவ்வாய்வுகளின்போது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி.கிருஷ்ணம்மாள், கடம்பத்தூர் உதவி செயற்பொறியாளர் திரு.கே.சபாநாயகம், திருவள்ளூர் வட்டாட்சியர் திரு.தமிழ்செல்வன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**